Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 71

வியாழக்கிழமை
05 பெப்ரவரி 2026

தை 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



## யாழ். பல்கலையில் கறுப்புக் கொடிகள்

யாழ்ப்பாணம், பெப். 5
இலங்கையின் 78ஆவது சுதந்திரதினமான நேற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழ »11



பிரிட்டன்


கிளிநொச்சி

# ஸ்ரீலங்காவின் சுதந்திரதினத்தில் கரியைப் பூசிய தமிழர்கள்!

## தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் எழுச்சியுடன் எதிர்ப்புப் போராட்டங்கள்

**கொழும்பு, பெப்ரவரி 5**

**இலங்கையின் சுதந்திரதினத்தை தமிழர்களின் கரிநாளாக அறிவித்து, தமிழர் தாயகத்தின் பல்வேறு பகுதிகளிலும் புலம் பெயர் தேசங்களிலும் நேற்றுப் போராட்டங்களும் பேரணிகளும் பெரும் எழுச்சி பெற்றன. பல்லாயிரக் கணக்கான மக்கள் இந்தப் போராட்டங்களில் கலந்து கொண்டனர்.** »09

## தமிழ் மக்களுக்கான தீர்வை தமிழர்களே தீர்மானிக்கட்டும்

### சிவாஜிலிங்கம் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப். 5
சுதந்திர தமிழீழம் வேண்டுமா? அல்லது வேறு தீர்வு வேண்டுமா? என்பதைத் தமிழர்கள் தீர்மானிக் கட்டும். அதுதான் சரியான தீர் வாக அமைய முடியும். அவ்வா றானதொரு தீர்வை நோக்கி நாம் »11

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் போராட்டம்!

யாழ்ப்பாணம், பெப். 5
ஊழியர் பற்றாக்குறை நீக்கப்பட வேண்டும். அலுவ லங்களில் உள்ள உட்கட்டமைப்புக் குறைபாடுகள் சரி செய்யப்பட வேண்டும். மேலதிக நேரக் கொடுப்பனவு கள் வழங்கப்பட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து »11



சுதந்திரம் கிடைக்காததாலேயே

## தமிழர்கள் ஆயுதம் ஏந்தினர்!

இயக்குநர் டி. ராஜேந்தர் தெரிவிப்பு

**விரிவு பக்கம்:-05**

முச்சந்தி முராரி

"நீங்கள் வேற நாடய்யா
நாங்கள் வேறு நாடு
எண்டு எங்கட
சனம் தெளிவாச்
சொல்லிப்போட்டினம்
கண்டியளோ"

## அநுரவின் அரசாங்கத்தை அசைக்க வாய்ப்பில்லை!

### மைத்திரி திடீர் புகழாரம்



கொழும்பு, பெப். 5
ஜனாதிபதி அநுர தலைமையி லான அரசாங்கத்தை அவ்வளவு இலகுவில் அசைக்க முடியாது என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் விரைவில் கவிழ்க்கப்படும் என்று எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் »11

## சுதந்திரத்துக்கான போர் தற்போதும் தொடர்கிறது

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



கொழும்பு, பெப். 5
முழுமையான சுதந்திரத்தை அடை வதற்கான போராட்டம் தற்போதும் தொடர்கின்றது. எமது வரலாற்றில் நாம் ஒதுக்கவேண்டிய பல விட யங்கள் உள்ளதோடு, நாம் உள் வாங்கவேண்டிய பெருமளவான விடயங்களும் உள்ளன – இவ்வாறு ஜனாதிபதி அநுர தெரிவித் தார். »11

## இலங்கையின் பொருளாதாரம் மிகவும் ஆபத்தான நிலையில்!

### கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 5
இலங்கையின் பொருளாதாரம் தற்போ தும் ஆபத்தான நிலையிலேயே உள் ளது. வறுமை, பொருளாதார ஏற்றத் தாழ்வு மற்றும் கடன் சுமையால் மக்கள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள னர் என்று கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித் »11

## பதிவுசெய்யப்படாத கால்நடைகள் அரசுடைமையாகும் நிலை நேரும்

### பதிவு மேற்கொள்வதற்கான அவகாசம் நீடிப்பு

யாழ்ப்பாணம், பெப். 5
கால்நடைப் பதிவு செய்வ தற்காக வழங்கப்பட்டிருந்த அவகாசம் நீடிக்கப்பட்டுள் ளது என்றும், பதிவு செய் யப்படாத கால்நடைகள் எதிர்காலத்தில் அரசுடை மையாக அறிவிக்கப்படச் சாத்தியங்கள் உள்ளன என் »11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 04.02.2026
சீட்டிழுப்பு இலக்கம் 4337
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 06 08 21 26
விசேட எழுத்து E

**ஹந்தஹண ராசி சுப பலன்**
திகதி 04.02.2026
சீட்டிழுப்பு இலக்கம் 1404
வெற்றி இலக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 3 7 40 46

**NLB ஜய**
திகதி 04.02.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0363
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 4 9 0 6

**மெகா பவர்**
திகதி 04.02.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2443
ஆங்கில எழுத்து P
சுப்பர் இலக்கம் 14
வெற்றி இலக்கங்கள் 36 54 63 80

**மஹஜன சம்பத**
திகதி 04.02.2026
சீட்டிழுப்பு இலக்கம் 6095
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 0 6 0 7 6 8

**தன நிதானய**
திகதி 04.02.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2125
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 07 61 66 72
விசேட எழுத்து T

**சுப தவசக்**
திகதி 04.02.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0211
வெற்றி இலக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள் 02 18 20

# இலங்கைக்கு வரவுள்ள ஐரோப்பிய ஒன்றியக்குழு

## ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையும் மீளாய்வு

கொழும்பு, பெப்.5

**இலங்கைக்கு வழங்கப்பட்டுவரும் ஜி.எஸ்.பி பி.ளஸ் வரிச்சலுகை மீளாய்வு உள்ளடங்கலாக ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக் கூட்டு ஆணைக்குழு கலந்துரையாடலில் பங்கேற்பதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் குழுவினர் அடுத்த வாரத்தொடக்கத்தில் இலங்கை வரவுள்ளனர்.**

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக் கூட்டு ஆணைக் குழுவின் சந்திப்பு கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் ப்ருசேல்ஸில் நடைபெற்ற நிலையில், 2025ஆம் ஆண்டு அதைக் கொழும்பில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கமைய கடந்த டிசெம்பர் மாத நடுப்பகுதியில் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் நாட்டுக்கு வரவிருந்தனர்.

ஆயினும் கடந்த நவம்பர் மாத இறுதியில் 'டித்வா' சூறாவளியால் ஏற்பட்ட பேரனர்த்தத்தை அடுத்து, கூட்டு ஆணைக்குழு சந்திப்பைப் பிற்போடவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியத்திடம் இலங்கை அரசாங்கம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக, அந்தச் சந்திப்பு பிற்போடப்பட்டது.

எதிர்வரும் திங்கட்கிழமை அல்லது செவ்வாய்க் கிழமை நாட்டுக்கு வரவுள்ள ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள், சில தினங்கள் தங்கியிருந்து பல்தரப்புச் சந்திப்புக்களிலும், மீளாய்வு நடவடிக்கைகளிலும் ஈடுபடவுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை தொடர்பிலும் மீளாய்வு செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 04.02.2026
தினம் புதன்கிழமை
வெற்றி வாரம் 0803
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கம் 6 4 3 2 5 2

**Super Ball**
திகதி 04.02.2026
தினம் புதன்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 3069
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கம் 19 28 68 72

**சனிதா**
திகதி 04.02.2026
தினம் புதன்கிழமை
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கம் 49 52 69 70
வெற்றி வாரம் 5230

**SASIRI**
திகதி 04.02.2026
தினம் புதன்கிழமை
வெற்றி வாரம் 0899
வெற்றி இலக்கம் 16 42 44

**லக்ன ராசி**
திகதி 04.02.2026
தினம் புதன்கிழமை
மகரம்
வெற்றி இலக்கம் 06 16 20 59
சீட்டிழுப்பு வாரம் 4781

**KAPRUKA**
திகதி 04.02.2026
தினம் புதன்கிழமை
ஆங்கில எழுத்து E
சுப்பர் இலக்கம் 36
வெற்றி இலக்கம் 04 06 12 43
வெற்றி வாரம் 2245

**அத கோடிபதி**
திகதி 04.02.2026
தினம் புதன்கிழமை
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கம் 37 60 61 72
வெற்றி வாரம் 2895

## சிறுமி துஷ்பிரயோகம் 30 ஆண்டு கடூழியம்!

அம்பாறை, பெப்.5

14 வயதுச் சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியமை தொடர்பான வழக்கின் குற்றவாளிக்கு 30 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்து கல்முனை மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்துள்ளது.

நீதிமன்றில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்ட 27 வயதுடைய நபர், பாதிக்கப்பட்ட சிறுமியின் சகோதரியின் கணவர் என்பதுடன் அவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

குற்றவாளிக்கு ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் ரூபா 10 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 10 இலட்சம் ரூபா நட்டஈடு வழங்கப்படவேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## பண்டார ரம்புக்வெல விளக்கமறியலில்!

கொழும்பு, பெப்.5

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவின் உறவினர் பண்டார ரம்புக்வெல எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. அவரது இல்லத்தில் மேற்கொள்ளப்பட்ட அதிரடிச் சோதனையின்போது நிதிமோசடிக் குற்றச்சாட்டில் அவர் கைதுசெய்யப்பட்டார். (ச-இ)



## சிங்கப்பூரிடமிருந்து பெற்றோல் இறக்குமதி

கொழும்பு, பெப்.5

இலங்கையின் எரிபொருள் தேவையைப் பூர்த்திசெய்யும் நோக்கில், சிங்கப்பூரைச் சேர்ந்த நிறுவனத்திடமிருந்து 92 ரக பெற்றோல் அடங்கிய 5 கப்பல் தொகுதிகளைக் கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கான நீண்டகால ஒப்பந்தத்தைக் குறித்த நிறுவனத்துக்கு வழங்குவதற்காக எரிசக்தி அமைச்சரால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை உத்தியோகபூர்வமாக அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்த ஒப்பந்தத்தின்மூலம் எதிர்வரும் மாதங்களில் நாட்டுக்குத் தேவையான பெற்றோல் இருப்பை உறுதிப்படுத்தமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-இ)

## இலங்கை - பின்லாந்து ஆலோசனை ஒப்பந்தம்

கொழும்பு, பெப்.5

இலங்கை மற்றும் பின்லாந்து நாடுகளுக்கு இடையிலான இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்தும்வகையில், இரு நாடுகளுக்கும் இடையே அரசியல் ஆலோசனைப் பொறிமுறையொன்றை நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சினால் முன்வைக்கப்பட்ட இந்த யோசனையின்கீழ் அரசியல் மற்றும் பொருளாதாரம், கல்வி மற்றும் கலாசாரம், சுற்றாடல், பிராந்திய விவகாரங்கள், என்பன பலப்படுத்தப்படும். இந்தப் புதிய பொறிமுறையின் ஊடாக, இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திரத் தொடர்புகள் முனைப்பான ஒத்துழைப்பாக மாற்றமடையும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

### வெளிநாட்டுப் பிரஜைகளுக்கான

## தற்காலிக லைசென்ஸ் சேவை ஐந்து மாவட்டங்களுக்கு விரிவு

வெளிநாட்டுப் பிரஜைகள், வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் மற்றும் இரட்டைக் குடியுரிமை கொண்ட இலங்கையர்களுக்கு தற்காலிகச் சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் சேவை 5 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது. இதுவரை வெரஹெர அலுவலகம் மற்றும் கட்டுநாயக்க சர்வதேச விமானநிலைய அலுவலகம் ஆகியவற்றில் மட்டுமே வழங்கப்பட்டுவந்த இந்தச் சேவை இனிவரும் காலங்களில் யாழ்ப்பாணம், குருநாகல், அம்பாந்தோட்டை, கம்பஹா மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்ட அலுவலகங்களிலும் கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செல்லுபடியாகும் வெளிநாட்டுச் சாரதி அனுமதிப்பத்திரத்தைக் கொண்டுள்ள நபர்கள், இலங்கையில் தற்காலிகமாக வாகனங்களைச் செலுத்துவதற்காக இந்த உரிமத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

வெளிநாட்டுச் சாரதி அனுமதிப்பத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு, இலங்கையின் நிரந்தர சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற விரும்புவோர், தொடர்ந்தும் வெரஹெரவிலுள்ள பிரதான சாரதி அனுமதிப்பத்திர அலுவலகத்துக்கே செல்லவேண்டும் என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 'கிவுல் ஓயா' வுக்கான எதிர்ப்பைப்போன்று மீனவர் பிரச்சினைக்கும் ஒன்றிணைக

## என்.எம்.ஆலம் தெரிவிப்பு




**மன்னார், பெப்.5**

**'கிவுல் ஓயா' நீர்த்தேக்கத் திட்டத்துக்கு எதிராக ஒருமித்த குரல் கொடுக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வட பகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு எதிராகவும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

மன்னாரில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் மற்றும் அடாவடித்தனங்கள் தொடர்பாகப் பல முறை முறைப்பாடுகள் செய்தும், கடற்றொழில் அமைச்சர் இது குறித்து மௌனம் காப்பது ஏன் என்று புரியவில்லை. உள்ளூரில் நடைபெறும் சட்டவிரோதத் தொழில்களைக் கட்டுப்படுத்தும் அரசாங்கம், இந்திய மீனவர்களின் வருகையைக் கட்டுப்படுத்தத் தவறுவது மீனவர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. வட பகுதி மீனவர்கள் தாக்கப்படும் போதும் அவர்களின் வலைகள் அறுக்கப்படும்போதும், தமிழ் அரசியற்கட்சிகள் ஏன் ஒருமித்த குரலில் எதிர்ப்புத் தெரிவிப்பதில்லை.

ஆளுங்கட்சியைச் சேர்ந்த வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள்கூட இந்த விவகாரத்தில் அமைதி காக்கின்றனர். தமிழகத்தில் எதிர்வரும் மே மாதம் சட்டசபைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், இவ்வாறான அத்துமீறல்கள் தூண்டிவிடப்படுகின்றன.

அண்மையில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளப் பாதிப்புகளுக்கு உரிய நிவாரணங்கள் இன்னும் கிடைக்கவில்லை.

இந்திய மீனவர்களால் கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர்கூட மீனவர்களின் வலைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு இதுவரை எவ்வித நஷ்டஈடும் வழங்கப்படவில்லை- என்றார். (ச-56)

# சுகாதாரச் சீர்கேட்டில் இயங்கிய வெதுப்பகத்துக்கு நடவடிக்கை!



மன்னார், பெப்.5

மன்னார் நகரசபை எல்லைக்குள் சுகாதாரச்சீர்கேடுகளுடன் இயங்கிய வெதுப்பகத்தின்மீது பல்வேறு பிரிவுகளில் சுகாதாரத்துறை சட்டநடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

மன்னார் பொதுச்சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை மருத்துவ அதிகாரி ரூபன் லெம்பேட் மற்றும் மன்னார் நகரசபை சுகாதார உத்தியோகத்தர் இணைந்து மேற்கொண்ட ஆய்வு நடவடிக்கையின்போது பழுதடைந்த பாண்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை, சுகாதாரமற்ற முறையில் பாண்கள் தயாரிக்கப்பட்டிருந்தமை, எலி நடமாட்டம் அதிகளவில் காணப்பட்டமை, உணவுகளில் பல்லி எச்சம் காணப்பட்டமை உணவு பொருள்களில் தூசுகள் கணப்பட்டமை உள்ளடங்கலாகப் பல்வேறு சுகாதாரக் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

இதனைத் தொடர்ந்து குறித்த வெதுப்பகம் மற்றும் அதன் ஊழியர்களுக்கு எதிராகப் பல்வேறு பிரிவு களின்கீழ் சுகாதாரத்துறையினர் வழக்குத்தாக்கல் செய்துள்ளனர். (ச-56)

# ஹெரோய்னுடன் இருவர் கைது!

கொழும்பு, பெப்.5

3 கிலோகிராம் 18 கிராம் ஹெரோய்னை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவரும், அதைக் கடத்துவதற்கு உடந்தையாக இருந்த மற்றுமொரு சந்தேகநபரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு களனிப் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இந்தச் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச-இ)

# 2026 பெப்ரவரி 'அபூர்வ மாதம்'

2 FEBRUARY 2026

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |

கொழும்பு, பெப்.5

2026ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதம், கணித ரீதியாகவும் நாட்காட்டி அமைப்பில் மிகவும் அரிதான ஒரு 'முழுமையான மாதமாக' அமைந்துள்ளது.

சாதாரண ஆண்டுகளில் பெப்ரவரி மாதம் 28 நாள் களைக் கொண்டிருக்கும். ஆனால், அந்த 28 நாள்களும் சரியாக நான்கு வாரங் களாக, எவ்வித மீதமுமின்றி அமைவது மிகவும் அரிதானது. இந்த மாதம் பெப்ரவரி முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து, பெப்ரவரி 28ஆம் திகதி சனிக்கிழமை நிறைவடைகிறது. நாட்காட்டியில் பார்க்கும் போது, ஞாயிறு முதல் சனி வரை சரியாக நான்கு வரிசைகளில் கச்சிதமான ஒரு செவ்வக வடிவில் இந்த மாதம் காட்சியளிக்கிறது. வாரத்தின் இடையில் மாதங்கள் தொடங்கும்போது அல்லது முடியும் போது ஏற்படும் மேலதிக நாட்கள் இந்த மாதத்தில் இல்லை.

இப்படியான ஒரு கச்சிதமான நாட்காட்டி அமைப்பு 6 மற்றும் 11 ஆண்டுகளின் சுழற்சியில் ஒருமுறை நிகழும். இதற்கு முன்னர் 2015ஆம் ஆண்டு இவ்வாறான ஒரு பெப்ரவரி மாதம் அமைந்திருந்தது. (ச-இ)

# ஆமிக்குச் சப்போர்ட்டும் அதிரடிப்படைப் பாதுகாப்பும்!

**அடுத்தகட்டச் சண்டைக்கு வீட்டுக்கட்சியில பிள்ளையார் சுழி போட்டிருக்கிறார் சட்டாம்பியார். எப்ப அவர் தலைவர் தேர்தலில கிளிநொச்சி வாத்தியாரிட்ட தோத்தாரோ, அன்டைக்குத் தொடங்கினது இந்தப் பழிவாங்கிற படலம். அதுக்குப் பிறகு சாம, தான, பேத, தண்டம் எண்டு எல்லாவழியளாலையும் வாத்தியாரைச் சுத்திவளைச்சு அடிச்சு, வழக்கெல்லாம் போட்டு, கட்சியை விட்டு அவரா ஓடோனும் எண்டு சட்டாம்பியார் பிளான் பண்ணுறார். ஆனால் வாத்தியாரும் -எவ்வளவு அடிச்சாலும் தாங்கிற வடிவேலு மாதிரி, கட்சியை விட்டுப் போகமாட்டன் எண்டு அழுங்குப்பிடியில நிக்கிறார். எண்டாலும் விடாக்கண்டன் வாத்தியாருக்கு கொடாக்கண்டன் மாதிரிச் சட்டாம்பியார் அதுக்குப் பிறகும் வாத்தியாரை அவமானப்படுத்துறதும், கட்சிக்குள்ள செல்லாக் காசா மாத்திறதுமான விளையாட்டை இன்னும் நிப்பாட்டேலை. அந்தப்பழி வாங்கிற படலத்தின்ர கடைசிக்கட்டமா இப்ப வாத்தியாரை வீட்டுக் கட்சியின்ர நாடாளுமன்றக்குழுத் தலைவர் பதவியில இருந்து நிப்பாட்டியிருக்கினம்.**

**இந்தமுறை பார்லிமெண்ட் எலக்சனிலையும் தான் தோத்ததையும், வாத்தியார் வெண்டதையும் சட்டாம்பியாரால தாங்கிக்கொள்ளமுடியேலை. அதால வீட்டுக்கட்சியின்ர நாடாளுமன்றக்குழுத் தலைவரா வாத்தியாரை வரவிடக்கூடாது எண்டு முதலே சலங்கை கட்டி ஆடத்தொடங்கிட்டார். வாத்தியாருக்குப் பதிலா தன்ர சீடப்பிள்ளைக்கு ( சண்டித்தன எம்.பி.க்கு) அந்தப் பதவியைக்குடுக்கோனும் எண்டு ஒற்றைக் காலில நிண்டவர். ஆனால் நாடாளுமன்றக்குழுவுக்கு ஆர் தலைவர் எண்டு அரசியல்குழுவும் எம்.பி.மாரும் தான் முடிவெடுக்கோனும். அதால சட்டாம்பியார் நினைச்சது நடக்கேலை. எண்டாலும் சட்டாம்பியார் விடேலை. நாடாளுமன்றக் குழுத்தலைவரா வாத்தியாருக்கு முன்னுக்கு சீற் குடுக்காமல், சண்டித்தன எம்.பி.க்கு முன்வரிசையில சீற்றைக் குடுங்கோ எண்டு ஆருக்கும் சொல்லாமல் கடிதமும் போட்டுப் பார்த்தார். அதுவும் சரிவரேலை. பிறகு அரசியலமைப்புக்குழுவுக்கும் வாத்தியாரைக் காய்வெட்டிப்போட்டு, தன்ர சீடப்பிள்ளையைப் போட தலையால கிடங்கு கிண்டியும், சட்டாம்பியாரின்ர கனவு கலைஞ்சதுதான் மிச்சம்.**

**இப்பிடி எப்பிடி அடிச்சாலும், ஏதோ ஒருவகையில வாத்தியார் நிண்டுபிடிக்கிறதால, என்ன செய்யிறதெண்டு தெரியாமல் சட்டாம்பியார் யோசிச்சுக்கொண்டிருக்கேக்கதான், பழம் நழுவிப் பாலில விழுந்தமாதிரி ஒரு சம்பவம் நடந்திச்சுது. ஆமியில பெரிய பதவி வகிச்ச ஒராளை, கணக்காய்வாளர் நாயகமாப் போடுறதா, இல்லையா எண்டு அரசியலமைப்புக்கூட்டத்தில வாக்கெடுப்பு நடக்கேக்க, அந்தப் பதவிக்கு ஆமிக்காரரைப் போடலாம் எண்ட பக்கம் வாத்தியார் கையை உயர்த்திப் போட்டார். அவ்வளவுதான், 'என்னெண்டு எங்கட கட்சியின்ர கொள்கைக்குமாறா ஒரு ஆமிக்காரனுக்கு சப்போர்ட்டா கையை உயர்த்தலாம்?' எண்டு சட்டாம்பியார் வானத்துக்கும் பூமிக்கும் குதிக்கத் தொடங்கிட்டார். 'கட்சியின்ர கொள்கையை மீறினபடியால உடனடியா அரசியலமைப்புக்குழுவில இருந்து விலகோனும், இல்லாட்டி நாடாளுமன்றக்குழுத் தலைவர் பதவியில இருந்து தூக்குவம்' எண்டு சட்டாம்பியார் வாத்தியாரை வெருட்டினவர். ஆனாலும் வாத்தியார் அதுக்கும் அசைஞ்சு குடுக்கேலை.அதால இப்ப நாடாளுமன்றக்குழுத்தலைவர் பதவியில இருந்து வாத்தியாரை நிப்பாட்டிப்போட்டு, தன்ர சீடப்பிள்ளையை அந்தப் பதவிக்குப் போட்டு வஞ்சத்தைத் தீர்த்திருக்கிறார் சட்டாம்பியார். ஆனால் நாடாளுமன்றக்குழுத் தலைவர் ஆரெண்டு கட்சியின்ர அரசியல்குழுதான் முடிவெடுக்கோனும். ஆனால் அப்பிடி அரசியல்குழு வாத்தியாரை நிப்பாட்டுறதா எந்த முடிவும் எடுக்கேலை எண்டு கிழக்கில இருக்கிற இன்னொரு எம்.பி. உண்மையைப் போட்டுடைச்சிருக்கிறார். அதைவிட ஆமிக்காரருக்கு சப்போர்ட் பண்ணி கையை உயர்த்தினதுக்குத்தான் வாத்தியாருக்கு உந்தத்தண்டனை எண்டால், இவ்வளவு வருசமும் அதிரடிப்படையின்ர பாதுகாப்போட திரிஞ்சதுக்கும், கட்சியின்ர கொள்கைக்கு மாறா சுதந்திரதினக் கொண்டாட்டத்துக்குப் போனதுக்கும் சட்டாம்பியாருக்குத்தான் முதலில தண்டனை குடுத்திருக்கோனும். அப்ப கட்சிக்காரர் இறுக்கமா இல்லாமல் சட்டாம்பியாருக்கு விட்டுக்குடுத்ததுக்கு இப்ப நல்லா அனுபவிக்கினம் கண்டியளோ.**

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பான் ஏசியா வங்கி, நீண்டகால ஊழியர்களை சிறப்புப் பாராட்டு நிகழ்வினை நடத்தி கௌரவித்தது




பான் ஏசியா வங்கி அண்மையில், தனது நீண்டகால ஊழியர்களின் உறுதியையும் அர்ப்பணிப்பையும் அங்கீகரிக்கும்வகையில் ஒரு சிறப்புவிருது வழங்கும் நிகழ்வினை தனது மனிதவளப் பிரிவு மூலம் ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிகழ்ச்சிக்கு பான் ஏசியா வங்கியின் தலைவர் அரவிந்தப் பெரேரா பணிப்பாளரும் பிரதம நிறைவேற்றதிகாரியுமான நளீன் எதிரிசிங்க, மற்றும் பெருநிறுவன முகாமைத்துவ உறுப்பினர்கள் ஆகியோர் வருகை தந்தனர். இந்த விழா, நிறுவனத்தின் வளர்ச்சிப் பயணத்தை உருவாக்குவதிலும், பல தசாப்தங்களாக அதன் செயற்றிறனை வலுப்படுத்துவதிலும் முக்கியமான பங்கு வகித்த நபர்களை கொண்டாடியது. நிகழ்வில், நாட்டின் பல கிளைகளிலும் வர்த்தகப்பிரிவுகளிலும் பணியாற்றும் சக ஊழியர்கள் ஒன்று சேர்ந்து, 15, 20, 25 மற்றும் 30 ஆண்டுகள் சேவை புரிந்த ஊழியர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்தனர். குறிப்பாக, வங்கியின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்றதிகாரியுமான நளீன் எதிரிசிங்க மற்றும் உதவிப் பொது முகாமையாளர் - மனிதவளம் திருமதி. துஷாரி மலால்கொட, 25 ஆண்டுகள் சேவை நிறைவு செய்ததற்காக கௌரவிக்கப்பட்டனர்.

இந்த தினமானது, உத்வேகமான உரைகள், பரிசளிப்புகள் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளால் நிறைவு பெற்றது. இது, வங்கியுடன் இணைந்து வளர்ந்த ஊழியர்களுக்கு நன்றியுணர்வை வெளிப்படுத்தும் மகிழ்வான மற்றும் நினைவில் நிற்கும் தருணத்தை உருவாக்கியது.

நிகழ்வில் பிரதம உரையினை வழங்கிய பான் ஏசியா வங்கியின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்றதிகாரியுமான நளீன் எதிரிசிங்க, பரிசு பெறுவோரின் திடமான அர்ப்பணிப்புக்கும் தொழில்முறை நற்பண்புக்கும் பாராட்டுத் தெரிவித்து தனது கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.

"ஓர் நிறுவனத்துடன் பல தசாப்தங்களாக வளர்ந்த ஊழியர்கள் தமது நம்பிக்கை, ஒற்றுமை மற்றும் பெருமையை வெளிப்படுத்துகின்றனர். எங்களுடன் இந்தப் பயணத்தை மேற்கொண்டு இன்று நம்மை உருவாக்க உதவிய நீண்டகால ஊழியர்களுக்கு நாம் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்."

**நிகழ்ச்சியைப் பற்றிய கருத்துகளைப் பகிர்ந்த பான் ஏசியா வங்கித் தலைவர் அரவிந்தப் பெரேரா:**

"எமது ஊழியர்களின் நீண்ட சேவை, வங்கியின் மதிப்பு மற்றும் நிர்வாகப் பண்பாட்டு வலிமையைப் பிரதிபலிக்கிறது. அவர்களின் விசுவாசமும் தொழில்முறை நற்பண்பும், நாட்டிற்கு நேர்மை, நிலைத்தன்மை மற்றும் நோக்கத்துடன் சேவை செய்யும் நம்பகமான நிறுவனத்தை உருவாக்குவதில் முக்கியமான பங்கு வகித்துள்ளது."

இந்நிகழ்வானது, நீண்டகால சேவை புரிந்த ஊழியர்களுக்கு பரிசுகள் வழங்குவதுடன் நிறைவு பெற்றது. வங்கியின்ஊழியர்களை மதிக்கும் மற்றும் கொண்டாடும் பண்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியது.

# வருடாந்தக் கூட்டமும் கௌரவிப்பு நிகழ்வும்

யாழ்பபாணம், பெப்.5

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் வருடாந்த பொதுக்கூட்டம் இணையத்தின் தலைவர் ந.சுகிர்தராஜ் தலைமையில் கைலாசபிள்ளையார் கோயில் அருகாமையிலுள்ள ராஜா கீறிம் கவுஸ் மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணி முதல் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் கலந்துகொள்வார்.

நிகழ்வின் விசேட நிகழ்வாக காலநிலை ஆய்வியல் துறையில் தனித்துவமான கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பங்களிப்புகளையும், கற்பித்தல் சேவைகளையும் வழங்கி எம் மண்ணின் வானிலைக்குக் குரலாக விளங்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மூத்த விரிவுரையாளர் முனைவர் நாகமுத்து பிரதீபராஜாவுக்கு 'நம் மண்ணின் வானிலை வல்லோன்' என்ற கௌரவம் வழங்கி வைக்கப்படவுள்ளது. (ச)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** காரிய அனுகூலமான நாள். புதிய முயற்சி சாதகமாகமுடியும். தேவையான பணம் கையில் இருந்தாலும், வீண்செலவுகளால் மனம் சஞ்சலப்படும். உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். வாழ்க்கைத்துணையுடன் மனஸ்தாபம் ஏற்படக் கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. நண்பர்களுக்காகச் செலவுசெய்யவேண்டி வரும்.

**மிதுனம்:** சாதகமான நாள். இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாகமுடியும். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார்.

**கடகம்:** தந்தைவழி உறவுகளால் ஆதாயம் கிடைக்கும். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். சிலருக்கு சிறிய அளவில் ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டுச் சரியாகும்.

**துலாம்:** உற்சாகமான நாள். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் உறவினர் ஒருவர் மூலம் மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**தனுசு** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். சகோதரவகையில் எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும்.

**மகரம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சிலருக்கு மனதில் இனந்தெரியாத சோர்வு உண்டாகலாம்.

**கும்பம்** கணவன் – மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். காரியங்களில் வெற்றி உண்டாகும்.

**மீனம்:** பொறுமையுடன் இருக்கவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். குடும்பம் தொடர்பான முடிவுகள் எடுப்பதில் அவசரம் வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## மங்கலமும் அமங்கலமும்...!

ஸ்ரீலங்கா அதன் 78ஆவது சுதந்திரதினத்தை நேற்றுக் கொண்டாடியுள்ளது. வாண வேடிக்கைகள், பாற்சோறு பரிமாற்றங்கள், காலிமுகத்திடல் அணிவகுப்பு என வழக்கத்துக்குக் கொஞ்சமும் குறைவில்லாமல் தெற்கில் இம்முறையும் இந்தக் கொண்டாட்டங்கள் அமைந்திருந்தன. ஆனால், தமிழர்களின் தாயகமான வடக்கு - கிழக்கின் நிலையோ அதற்கு நேர்மாறு. கறுப்புக்கொடிகள், பேரணிகள், கதறல்கள், கண்ணீர்க் கூக்குரல்கள் என்பனதான் சுதந்திரதினத்தன்று தமிழர் தாயகத்தின் பதிவுகள். ஆக, ஒரே தெருவில் மங்கல - அமங்கல ஓசைகள் கேட்பதைப் போன்றதான நிலையிலேயே ஸ்ரீலங்காவின் சுதந்திரதினக் கொண்டாட்டம் அமைந்திருக்கின்றது.

சுதந்திர இலங்கைக்கு இன்று 78 வயதாக இருந்தாலும், தமிழர்கள் மீதான சிங்களப் பேரினவாத அடக்குமுறை 95 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பழமையுடையது. 1931ஆம் ஆண்டுகளில் ஆங்கிலேயர்கள் ஸ்ரீலங்காப் பிரதிநிதிகளிடம் பொறுப்பாட்சியை ஒப்படைத்தனர். அன்று தொடங்கிய சிங்கள - பௌத்த தேசத்தின் இனவழிப்பு நடவடிக்கைகள், ஸ்ரீலங்கா சுதந்திரம் அடைந்த நாளான 1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நான்காம் திகதியுடன் முழுமையான முறையில் வேகம்பெற ஆரம்பித்தன. அன்று முதல் இன்றுவரை இரண்டு இலட்சத்துக்கும் மேலான தமிழ் மக்களைக் கொன்றும் பத்து இலட்சத்துக்கும் அதிகமானவர்களை புலம்பெயர வைத்தும், பல்லாயிரம் தமிழர்களை காணாமல்போகச் செய்தும், பலநூறு தமிழர்களைப் பல்லாண்டுகளாக சிறைகளில் அடைத்தும், தமிழர்களின் தாயகத்தில் பல ஆயிரம் சதுரக் கிலோமீற்றர் நிலங்களை பலவழிகளிலும் அபகரித்தும், தமிழர்களின் பல ஆயிரம் கோடி செல்வங்களை அழித்தும் சிங்களப் பேரினவாதப் பூதம் தன் பசியாற்றியிருக்கின்றது. அதுமட்டுமல்லாது தனிச்சிங்களச் சட்டம், கல்வியில் தரப்படுத்தல், வேலைவாய்ப்புகளில் பாரபட்சம், அபிவிருத்தியில் புறக்கணிப்பு என சிங்கள பௌத்த தேசம், தமிழர்களை தொடர்ச்சியாக ஓரங் கட்டியும் வந்துள்ளது.

கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டுப் பதற்றத்தில் இருந்தும், எட்டுத் தசாப்தகால அரசியலில் இருந்தும், மூன்று தசாப்தகால ஆயுதப் போராட்டங்களில் இருந்தும் எந்தவொரு பாடத்தையும் சிங்கள பேரினவாதத் தலைவர்கள் இன்றளவும் கற்றாகவில்லை. காணாமற்போனவர்களின் விவகாரம், காணி அபகரிப்பு, பௌத்த மயமாக்கல், சிறுபான்மை இனங்களின் பாரம்பரிய வழிபாட்டுத்தலங்கள் மீதான ஆக்கிரமிப்பு, சிங்களத் திணிப்பு என நாளுக்குநாள் பதற்றம் மலிந்த பூமியாகவே தமிழர் தாயகம் மாற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றது. ஏதோவொரு பிரச்சினை மாறிமாறி தோற்றுவிக்கப்படுகின்றது, ஏதோவொரு விவகாரம் மாறிமாறிப் பேசு பொருள் ஆக்கப்படுகின்றது. மாறாக நீடித்த நிரந்தர அமைதியை தமிழர்தாயகம் கண்டுகொள்வதற்கு ஏதுவான நகர்வுகள் பூர்வாங்க அடிப்படையிலேனும் மேற்கொள்ளப்படவில்லை. ஜனாதிபதி அநுரவின் ஆட்சியிலும் இந்த நிலைமை தொடர்வது பெரும் துயரே.


பொருளாதாரத்தை இழந்து, தமக்கான அரசியலை இழந்து, தம் தேசத்தைத் துறந்து வாழ்ந்துவரும் தமிழர்கள் இன்று பல்லாயிரம் பேர். இவ்வாறிருக்கையில் ஸ்ரீலங்காவின் சுதந்திரதினம் எவ்வாறு தமிழர் தாயகத்தின் சுதந்திரதினமாகும்? இது சுதந்திரதினமாக மாறுவதும் அல்லது மாறிமாறி கரிநாளாகக் கடைப்பிடிக்கப்படுவதும் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் கைகளில்தான் தங்கியுள்ளது. சிறுபான்மை மக்களும் 'ஸ்ரீலங்காவின் மக்களாக' சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்கு என்று வழியேற்படுத்தப் படுகின்றதோ அன்றுதான் 'கரிநாள்' எனும் எண்ணப்பாடு தமிழர்களை விட்டகலும். ஜனாதிபதி அநுரவின் ஐந்தாண்டு ஆட்சியிலேனும் இந்த நிலைமை மாறட்டும்.



## பொய்யாமொழி

**அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை**

**பொருள்:** இளைஞராக உள்ளவர் பிற்காலத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணாமல் அறம் செய்யவேண்டும். அதுவே உடல் அழியும் காலத்தில் அழியாத்துணையாகும்.






## சுதந்திரம் கிடைக்காததாலேயே தமிழர்கள் ஆயுதம் ஏந்தினர்!

### இயக்குநர் டி. ராஜேந்தர் தெரிவிப்பு

சென்னை, பெப்.5

**இலங்கையில் தமிழ் மக்களுக்கு உண்மையான சுதந்திரம் கிடைக்காத காரணத்தினாலேயே அவர்கள் ஆயுதப் போராட்டத்தை நோக்கித் தள்ளப்பட்டார்கள் எனத் தென்னிந்தியப் பிரபல இயக்குநரும், இலட்சிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான டி.ராஜேந்தர் தெரிவித்துள்ளார்.**

இலங்கையின் 78ஆவது சுதந்திர தினமான நேற்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத் தமிழர்களால் கடைப்பிடிக்கப்பட்ட 'கறுப்பு தினப் போராட்டத்துக்கு' ஆதரவளித்து இதனைத் தெரிவித்தார்.

உரிய சுதந்திரம் மறுக்கப்பட்டதன் விளைவாகவே தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய சூழல் ஏற்பட்டது. ஈழத்தமிழர்கள் இன்று உலகம் முழுவதும் சிதறி வாழ்வதற்குக் காரணம், அவர்கள் தேசத்தில் அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய அடிப்படை சுதந்திரம் மறுக்கப்பட்டதே ஆகும்.

தீர்வு கிடைக்காததால் தமிழ் மக்கள் கடலில் தத்தளிப்பதைப் போன்ற நிலையிலேயே இன்றும் உள்ளனர். அவர்களின் போராட்டம் என்பது ஒரு கனல்; இது இன்று பற்ற வைக்கப்பட்டதல்ல, காலங்காலமாக எரியும் கனல்.

நான் என்றைக்கும் ஈழத்தமிழர்களின் உணர்வுகளுக்குப் பக்கபலமாக இருப்பேன் என்றும் டி. ராஜேந்தர் தெரிவித்துள்ளார். (ச-27)

## ஏறி இறங்கும் தங்க விலை

கொழும்பு, பெப்.5


உலக சந்தையில் நேற்று முன்தினம் தங்கத்தின் விலை அதிகரித்ததால் இலங்கையிலும் தங்கத்தின் விலை அதிகரித்துள்ளது. செட்டியார் தங்கச் சந்தைத் தரவுகளுக்கமைய, கடந்த திங்கட்கிழமை 3 இலட்சத்து 38 ஆயிரத்து 600 ரூபாவாக காணப்பட்ட 22 கரட் ஒரு பவுன் தங்கத்தின் விலை நேற்று முன்தினம் 11 ஆயிரம் ரூபா அதிகரித்து 3 இலட்சத்து 49 ஆயிரத்து 600 ரூபாவாகக் காணப்பட்டது. 3 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாவாக காணப்பட்ட 24 கரட் ஒரு பவுன் தங்கத்தின் விலை நேற்றுமுன்தினம் 3 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவாக அதிகரித்திருந்தது. (எ-இ)

## 9,158 சிப்பாய்களுக்கு பதவி உயர்வுகள்

கொழும்பு, பெப்.5

நாட்டின் 78 ஆவது சுதந்திர தினத்தைமுன்னிட்டு, இலங்கை இராணுவத்தின் நிரந்தர மற்றும் தொண்டர் படைகளைச் சேர்ந்த 9,158 சிப்பாய்களுக்கு அடுத்த நிலைகளுக்கான பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

இராணுவத் தளபதியின் பரிந்துரைக்கு இணங்க இந்தப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. (ச-இ)



## அரிய விலங்கான சருகுமான் இறைச்சியுடன் இருவர் கைது

கிளிநொச்சி, பெப்.5


கிளிநொச்சி, தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இலங்கையின் அரியவகை இனமான 'உக்லான் சருகுமான்' என்று அழைக்கப்படும் விலங்கை இறைச்சியாக்கிக் கடத்திச் சென்ற சந்தேகநபர்கள் இருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத்தகவலின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. சருகுமானை வேட்டையாடி அதன் இறைச்சியைக் கொண்டு சென்றபோது சந்தேகநபர்கள் பிடிபட்டனர். (ச-113)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்







# உரும்பிராய் திருவருள்மிகு ஞானவைரவ சுவாமி கோயில்

## புனராவர்த்தன சமர்ப்பண உத்தமோத்தம நவகுண்டபக்ஷ பிரதிக்ஷ்டா

# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2026

## (திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாத் திருமுகம்)

**எண்ணெய்காப்பு 05.02.2026 வியாழக்கிழமை**
**காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை**

வைரவர் துதி
திருச்சிற்றம்பலம்
ஊரோங்கும் உரும்பை நகர் ஞானவைரவர்
பேரோங்கும் பிறநாட்டில் உள்ளோரும் சேர்ந்து ஒன்றாய்
நீரோங்கு கண்கள் ததும்ப துதித்துருகி
சீரோங்க வைத்து எம்மை சிறப்புறக் காத்திடுவான்
திருச்சிற்றம்பலம்

**மஹா கும்பாபிஷேகம்06.02.2026 வெள்ளிக்கிழமை**
**காலை 7.20 மணிமுதல் 08.35 மணிவரை**

சிவபூமி, புண்ணியபூமி என நாயன்மார்களாலும் ஏனைய சைவக் குருமார்களாலும் விதந்து கூறப்பட்டதும், இராவணேஸ்வரனாலும் விபீஷணனாலும் நவகோடி லிங்கப் பிரதிஷ்டை செய்யப்பட்டதும் தக்ஷிண கைலாயம் எனப் போற்றப்படும் இலங்காபுரியின் வடபால் சைவமும், தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாணத்தில் உரும்பிராய் பதியில் பன்னெடுங் காலமாக தன்னை நாடிவரும் அடியவர்களின் துயர்நீக்கி அருள் பாலிக்கும் ஞானவைரவப் பெருமானுக்கும் சிவலிங்கப் பெருமானுக்கும் விநாயகர் முதல் சண்டேஸ்வரர் வரையுள்ள பரிவார மூர்த்திகளுக்கும் நிகழும் மங்களகரமான விசுவாவசு வருடம் தைத்திங்கள் 23ம் நாள் (06.02.2026) வெள்ளிக்கிழமை உத்தராயணமும், பஞ்சமித்திதியும், அத்த நட்சத்திரமும் அமிர்த சித்த யோகமும் கூடிய காலை 07.20 முதல் 08.35 மணி வரையுள்ள கும்ப லக்கின சுபமுகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகம் எனும் திருக்குட நன்நீராட்டு விழா இடம்பெற திருவருள் கூடியுள்ளது. இத்தருணமும் இதன் முன் பின் இடம்பெறும் கிரியா நிகழ்வுகளிலும் மெய்யடியார்கள் யாவரும் கலந்துகொண்டு ஞானவைரவப் பெருமானின் திருவருள் பெற்று பெருவாழ்வு வாழ்வீர்களாக.




### மகா கும்பாபிஷேக வாழ்த்துச் செய்தி

ஈசன் அருளால் இனிதே நிறைவேறும் ஞானவைரவப் பெருமானின் திருக்குடமுழுக்கு நல்வாழ்த்துக்கள்!
"தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடித் காடுடைய சுடலைப் பொடிபூசி என் உள்ளம் கவர் கள்வன்"
எமது உரும்பிராய் மண்ணின் காவல் தெய்வமாகவும், வேண்டும் வரங்களை அள்ளி வழங்கும் வள்ளலாகவும் வீற்றிருக்கும் அருள்மிகு ஞானவைரவப் பெருமானின் மகா கும்பாபிஷேகப் பெருவிழா இனிதே நடைபெறுவது குறித்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

**இறைபணியில், க.சிவராஜா - தலைவர்,**
**ஆலய நிர்வாக சபை,**
**அருள்மிகு ஞானவைரவர் கோவில், உரும்பிராய்**

### செஞ்சொற்செல்வரின் ஆசிச் செய்தி

சீரும் திருவும் நிறைந்த திருவூர் உரும்பிராய இத்திருவூரில் திருகோவில்கள் யாவும் மிகச் சிறப்பாகப் பேணிப்பாதுகாக்கப்பட்டு வருகிறது. உரும்பிராய் கோப்பாய் வீதியில் அருட்சிறப்பு மிக்க தலமாக விளங்குவது ஞானவைரவர் ஆலயமாகும் இவ்வாலய கும்பாபிஷேகம் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். பழைமை மிக்க இவ் வைரவர் ஆலயத்தை அடியவர்கள் காலத்துக்கு காலம் புதுப்பித்துப் பேணிப்பாதுகாத்து வருகிறார்கள். அற்புதம் நிறைந்த இத் திருக்கோவில் பூசகராக விளங்கிய அமரர் சிவஸ்ரீ கந்தையா குருக்கள் அவர்கள் மிகச்சிறப்பாக வழிநடத்தினார்கள். அவர்களிடம் பார்வை பார்ப்பதற்காக தினமும் பலர் இவ்வாலயத்துக்கு முன்வருவதை யான் கண்டுள்ளேன். இன்றும் ஆலயம் சிறப்பாக இயங்க ஒத்துழைக்கும் அனைவருக்கும் நன்றி கூறி அமைகிறேன். ஞான வைரவப் பெருமான் திருவருளால் அனைவரும் நலமாக வாழ நல்லாசி கூறி நிறைவு செய்கிறேன்.

**கலாநிதி.ஆறு.திருமுருகன்**
**தலைவர் ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை,**
**தலைவர் சிவ பூமி அறக்கட்டளை, இலங்கை.**




### ஆலய பிரதமகுருவின் ஆசியுரை



இலங்கையில், வடமாநிலத்தில், உள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில், இயற்கை வளங்கள் நிறைந்த உரும்பிராய் பதியில் கோவில் கொண்டெழுந்தருளி மர இலைகளின் சலசலப்பு ஓசையில் ஞானவைரவப் பெருமான் அருளாட்சி வழங்கிக் கொண்டிருக்கிறார். தற்போது 175 ஆண்டுகளுக்கு மேல் வரலாற்றினை கொண்டு விளங்கி நிற்கின்றது எம் ஞானவைரவர் ஆலயம். ஆகவே இப்பொழுது புனரமைப்பு செய்து மகா கும்பாபிஷேகம் செய்யும் வேளையில் இக்கும்பாபிஷேகம் என்பது பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறுவது இதைக் கொண்டும் மக்களுக்கு இந்த கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்ளும் மக்களுக்கு ஞானவைரவ பெருமானின் அருள் கடாட்சம் பெற்று வாழ வேண்டி நல்லாசி கூறுகிறேன்.

**சிவஸ்ரீ செல்வவைரவநாதக் குருக்கள்**
**ஞான வைரவர் ஆதீன கர்த்தா, ஞான வைரவர் கோயில்.**

## கிரியா கால விபரம்

| | | |
|---|---|---|
| 2 ம் நாள் கிரியை<br>தை மாதம் 22ம் நாள்<br>(05.02.2026) வியாழக்கிழமை | காலை 8.00 மணி முதல் | பால கணபதி வழிபாடு, புண்ணியாக வாசனம், விசேட சந்தி, த்வஜஸ்தம்ப பூஜை, தைலாப்பியங்கம், யாக சாலைப் பிரவேசம், யாக பூஜைகள், பாவனாபிஷேகம், சகஸ்ர நாம ஹோமம், விசேஷ திரவிய ஹோமம், தீபாராதனை, வேததோத்திர திருமுறை பாராயணம், விசேஷ திரவிய ஹோமம், விபூதி பிரசாதம் வழங்கல் |
| | மாலை 5.00 மணி வரை | வக்ர துண்ட கணபதி வழிபாடு, புண்ணியாக வாசனம், விசேட சந்தி பஞ்சகவ்விய பஞ்சாமிர்த பூசை, விம்பசுத்தி, விம்ப ரக்ஷா பந்தனம், துத்வஜஸ்தம்ப பூஜை, பூர்வ பச்சிம சந்தானம், நியாஷங்கள், யாக பூஜை, ஸ்பர்ஷாகுதி, பூர்ணாகுதி, தீபாராதனை, வேத தோத்திர திருமுறைப்பாராயணம், வஸ்திர உபசாரங்கள் வழங்கல். |
| 3 ம் நாள் கிரியை<br>தை மாதம் 23ம் நாள்<br>(06.02.2026) வெள்ளிக்கிழமை | காலை 7.20 மணி முதல்<br>8.35 மணிவரை | விக்ன கணபதி வழிபாடு, புண்ணியாக வாசனம், விசேட சந்தி, த்வஜஸ்தம்பு பூஜை, யாகசாலைப் பிரவேசம், யாக பூஜை, உபசார ஹோமம், மஹா பூர்னாகுதி, தீபாராதனை, வேத தோத்திர திருமுறை பாராயணம், ராக தாள சமர்ப்பணம், நாட்டியாஞ்சலி, அந்தர்பலி, பகிர்பலி, யாத்திராதானம், கும்ப உத்தாபனம், மங்கள வாத்திய சகிதம் கும்பங்கள் தூபி அபிஷேகம், விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும், மஹா கும்பாபிஷேகம், தசதரிசனம், ஆசியுரைகள், ஆசாரியர் ஸம்பாவனை, மஹா அபிஷேகம், விசேட பூஜை, வசந்த மண்டப பூஜை, மகேஸ்வர பூஜையும் நடைபெறும்.<br>மாலை எம்பெருமான் உள்வீதி, வெளிவீதி உலாவருவார். |

## மஹா கும்பாபிஷேக குருமார்கள்

### சர்வபோதகாச்சாரியர்கள்
பிரம்ம ஸ்ரீ க.மு. சோமசுந்தர குருக்கள்
பர்வதவர்த்தினி ஆலயம்
உரும்பிராய்

### பிரதிஷ்டா பிரதமகுரு
சிவாகம கிரியாவித்தகர், கிரியாபூஷணம்
ஈஸான சிவாச்சாரியார்
சிவ ஸ்ரீ செல்வவைரவநாதக் குருக்கள்
ஆதீன கர்த்தா ஞானவைரவர் ஆலயம் - உரும்பிராய்

### ஸர்வ சாதகாசிரியர்கள்
சிவ ஸ்ரீ சண். நிர்மலேஸ்வரக் குருக்கள்
உரும்பிராய்
சிவ ஸ்ரீ ஜெயகுணசீலன் ஐயா - அளவெட்டி
சிவ ஸ்ரீ பேரம்பல நிஷாந்தனக் குருக்கள்

### நல்லாசி வழங்கும் குருமார்கள்
பிரம்ம ஸ்ரீ மஹாதேவ வத்ஸாங்க குருக்கள்
காயத்திரி பீடம் (இணுவில்)
சிவ ஸ்ரீ நவரத்ன பிரபு தேவ குருக்கள்
ஆதீன குரு முத்துமாரி அம்மன் ஆலயம்
கொழும்புத்துறை.

### நவகுண்ட மூர்த்திய குருமணிகள்
சிவ ஸ்ரீ ஐயப்பதாசக் குருக்கள் - ஐயப்பன் ஆலயம் (கட்டுவன்)
சிவ ஸ்ரீ ந.முரசொலிமாற குருக்கள் - கல்லடி, மட்டக்களப்பு.
சிவ ஸ்ரீ இ.ஈஸ்வரக் குருக்கள் (அளவெட்டி)
சிவ ஸ்ரீ பே. நிருஷனக் குருக்கள் - மஹாகாளி ஆலயம் (கோண்டாவில்)
சிவ ஸ்ரீ இ. அமிர்தேஸ்வரக் குருக்கள் (நெடுங்கேணி கதிர்வேலாயுத சுவாமி ஆலயம்)
சிவ ஸ்ரீ மி. லோகிதப்பிரபு குருக்கள் (உரும்பிராய்)
சிவ ஸ்ரீ வி.சிவாக் குருக்கள் - வித்தக விநாயகர் ஆலயம் (கோப்பாய்)
சிவ ஸ்ரீ அ.சுரேஸ்குமாரக் குருக்கள் - கோண்டாவில்
சிவ ஸ்ரீ க. நிரோஷனக் குருக்கள் - உரும்பிராய்

### யாக சம்ரட்சகர்கள்
சிவ ஸ்ரீ இ. நிரஞ்சன் ஸர்மா - பருத்தித்துறை
சிவ ஸ்ரீ யோ. டினோஜன் ஸர்மா - மட்டக்களப்பு
சிவ ஸ்ரீ உ.சாருஜன் ஸர்மா - மட்டக்களப்பு
சிவ ஸ்ரீ ல. டதுசன் ஸர்மா - மட்டக்களப்பு
சிவ ஸ்ரீ தெ. மிதுஸர்மா - மட்டக்களப்பு
சிவ ஸ்ரீ க. சுதாகரன் ஐயா - உரும்பிராய்

**அடியவர்கள் கும்பாபிஷேகத்திற்கு தேவையான சிவத்திரவியங்கள், பால், இளநீர், கற்பூரம், தேங்காய், பூக்கள், பூமாலை மற்றும் அபிஷேகத்திரவியங்களை வழங்கி எம் பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம். தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெறும் பூர்த்தி நாளன்று 108 சங்காபிஷேகம் நடைபெறும்.திருப்பணி நிதி, மஹாகும்பாபிஷேக நிதி, மண்டலாபிஷேகம் செய்ய விரும்பும் அடியவர்கள் ஆலய பரிபாலன சபையினரை தொடர்பு கொள்ளவும்.**

சுபம்

ஆலய பரிபாலன சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ பாட கருத்தரங்கு

யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தயாராகவுள்ள மாணவர்களுக்கான கிறிஸ்தவ பாட (கத்தோலிக்கம் அல்லாத) வழிகாட்டல் கருத்தரங்கு நாளைமறுதினம் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

நாளை காலை 9.30 தொடக்கம் பிற்பகல் 1.30 வரை இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ள நிமர் மண்டபத்திலும், வலிகாம வலயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான கருத்தரங்கு உடுவில் மகளிர் கல்லூரியிலும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# தமிழருக்குவழங்கவே அரசிடம் நிதி இல்லை

## சாணக்கியன் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, பெப்.5

மணலாறுப் பிரதேசத்தில் சட்டவிரோதமாகக் குடியேற்றப்பட்ட வெலிஓயா குடியேற்றவாசி களுக்கு நீர் வழங்க 23 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பிரதேசங்களுக்கு நீர் விநியோகத் திட்டத்துக்கு நிதி ஒதுக்கப்படவில்லை. இது எந்தவகையில் நியாயம்? என்று கேள்வி எழுப்பியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாணக்கியன்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை மேற்கு, வவுணதீவு, பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பனையறுப்பான், பன்சேனை, வாதக்கல்மடு, பாவற்கொடிசேனை, உன்னிச்சை மற்றும் நெடியமடு போன்ற பிரதேசங்களுக்கு இதுவரை குடிதண்ணீர் வசதிகள் வழங்கப்படவில்லை. உன்னிச்சையில் இருந்து பல்வேறு பிரதேசங்களுக்கு குடிதண்ணீர் கொண்டு செல்லப்படப் போதும், உன்னிச்சை மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்படவில்லை. வரவு-செலவுத் திட்டத்தில் இந்தப் பிரதேசத்துக்கு நீர் விநியோகத்திட்டத்தை வழங்கும் முன்மொழிவுகள் ஏதும் முன்வைக்கப் படவில்லை. மணலாறுப் பிரதேசத்தில் சட்டவிரோத மாகக் குடியேற்றப்பட்ட வெலிஓயா குடியேற்றவாசிகளுக்கு நீர் வழங்க 23 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. சிங்களவர்களுக்கு நீர் வழங்க நிதி உள்ளது. தமிழர்களுக்கு நீர் வழங்க நிதி இல்லை. கிவுல்ஓயாத் திட்டம் ஊடாக சிங்களக் குடியேற்றங்களை முறையற்ற வகையில் உருவாக்குவதற்கு முயற்சிக்கின்றீர்கள்-என்றார். (எ-இ)

அச்சக வேலைக்கு
ஓவ்செட் மெசின் மைண்டர் தேவை
KORS KORD மெசின் மைண்டர் உடனடியாக தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
077 3965 214

காணி விற்பனை
யாழ்ப்பாணம், பிறவுன் வீதிக்கு அருகாமையில் கலட்டி அம்மன் கோவில் வீதியில் இரண்டு பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு : 077 767 8318
(CR/47017) J-1

காணி விற்பனைக்கு
கிழக்கு அரியாலையில்
கடற்கரைக்கு அருகாமையில்
3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
076 430 9182, 077 977 3251
(CS/60648) J-1

நீங்கா நினைவில்

24ஆம் ஆண்டு

மலர்வு 27.04.1938



உதிர்வு 01.02.2002

அமரர் வெ.வேலு
(கந்தையா)
(ஓய்வு பெற்ற மின் கம்பி இணைப்பாளர்)
திதி:05.02.2026

30ஆம் ஆண்டு

அன்னை மடியில் 21.02.1977



அமலன் அடியில் 13.06.1996

செல்வன் வேலு சனகன்
(முன்னாள் மாணவன்
தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

ஆண்டுகள் பல ஆனாலும் உங்கள் இருவரினதும் நினைவுகளோடு கலந்து வாழும்.

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்.

# INVITATION FOR BID 2026/01

## VALIKAMAM EAST PRADESHIYA SABHA

## NORTHERN PROVINCE

1. The **Chairman, Local Authority Procurement Committee**, on behalf of the Valikamam East Pradeshiya Sabha,Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Council
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of Building construction for grade mentioned in the table below.
   "Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document**. Additional details are provided in the Bidding Schedule (Section 5) for SBD 3 Documents
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2026-02-05 To 2026-02-19** during **09:00 hrs and 15:00 hrs**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman**, Valikamam East Pradeshiya Sabha, Puttur **(T.P:021-205-8865, e.mail: pmdveps @ gmail.Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Local Authority Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur on or before as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Valikamam East Pradeshiya Sabha, Puttur as stated intable below.**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given inthe Tables.

| | |
|---|---|
| **Document Issuing/Purchasing Period** | **From 2026-02- 05 To 2026-02-19** |
| **Pre-Bid Conference** | **At 10.30 A.M on 2026-02-12** |
| **Closing and Opening of Bids** | **At 2.00 P.M on 2026-02-20** |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit: Security Amount (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit: Validity Period | Bid Validity Period (Days) |
|---|---|---|---|---|---|---|---|---|
| **NP/14/41(13) /4/ Council /01/2026/01** | **Construction of Ammachchi stage III at Nilavarai** | 6.75 | **70** | **C8 or above (Building)** | **3,500.00** | 68,000.00 | 05.06.2026 | **77** |
| **NP/14/41(13) /4/ Council /01/2026/02** | **Establishment of Movable food Stalls** | 1.66 | **49** | **C9 or above (Building)** | **1,000.00** | 17,000.00 | 08.05.2026 | **49** |
| **NP/14/41(13) /4/ Council maintenance/ 01/2026/03** | **Construction of Shoulder work for Puthuthoppu veethy 1st lane Atchuvely north, V.C Lane Kopay, Playground Veethy Kalviyankadu** | 0.85 | **30** | **C9 or above (Highway)** | **1,000.00** | 8,500.00 | 08.05.2026 | **49** |
| **NP/14/41(13) /4/ Council maintenance /01/2026/04** | **Renovation of Karunakara Pillaiyar Kovil Veethy** | 1.12 | **30** | **C9 or above (Highway)** | **1,000.00** | 11,500.00 | 08.05.2026 | **49** |

**Chairman**
**Local Authority Procurement Committee,**
**Valikamam East Pradeshiya Sabha, Puttur.**

**05/02/2026**

(CR 47013)A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரமுனவின் கொள்கைகளை ஏற்றால் ரணில் இணையலாம்!

## சாகர காரியவசம் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.5

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் அரசியல் கொள்கையை நாட்டுமக்கள் இரண்டு முறை புறக்கணித்துள்ளார்கள். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ராஜபக்சக்களின் கொள்கையை ஏற்றால் அவருடன் கூட்டணிய மைப்போம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.


ஸ்ரீலங்காபொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- கடந்த கால அரசாங்கங்கள் மற்றும் ஆட்சியாளர்கள் தொடர்பில் பொய்யுரைத்துதான் தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. இன்று அந்தப் பொய்கள் அரசாங்கத்துக்கு எதிராக திரும்பியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தேசியத்தை முன்னிலைப்படுத்தியே செயற்பட்டார். அந்தக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தோற்றுவிக்கப்பட்டது. பொதுஜன பெரமுனவின் தேசியத்துக்கு முன்னுரிமை என்ற கொள்கையை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டால் அவருடன் அரசியல் கூட்டணியமைப்போம். இதில் எவ்வித பிரச்சினையும் எமக்குக் கிடையாது- என்றார்.(ஏ-இ)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 18.04.1947 உதிர்வு 17.01.2025

அமரர்

**மார்க்கண்டு வேதாரணியம்**

ஆண்டு ஒன்று கடந்தும்
உங்கள் நினைவுகள் எங்கள்
இதயங்களில் என்றும் நிறைந்திருக்கும்
உங்கள் வாழ்க்கை ஒரு பாடமாக
எங்களுக்கு அமைய
உங்கள் ஆசி கிடைக்கட்டும்.


பிரிவால் துயருறும்..
குடும்பத்தினர்

3ம் வட்டாரம்,
வேலணை கிழக்கு,
வேலணை.

(CS 60635) A

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 07.04.1952 உதிர்வு 17.01.2025

திதி:சங்கடஹர சதுர்த்தி

**அமரர் இராசு பொன்னுத்துரை**

அன்பின் அடையாளமே! அழத்தெரியாத ஆருயிரே!
மண்ணில் விழாமல் வலிகளைப் புதைத்திட்ட உழவரே!

இருக்கும்போது கற்றுக்கொடுத்ததை விட - இறந்த பிறகு
எமக்கு அதிகமாய்க் கற்றுக் கொடுக்கும் ஆத்மா நீங்கள்!
'அப்பா' எனும் ஆலமர நிழலில் இருந்தவரை
வாழ்க்கை எனும் வெயில் எம்மைச் சுட்டதில்லை!

பறந்து போனது ஒரு வருடம்.... ஆனால்!!!
வேர்களில் இருந்து கசியும் நீராய்
தங்களின் நினைவுகள்....
எம் இதயங்களில் இரணங்களையும் - விழிகளில்
கண்ணீர்த் துளிகளையும் தந்து செல்கின்றன!...

மனைவி - சந்திரகுமாரி
பிள்ளைகள் : டினேஷ் (France)
[illegible] (UK)
[illegible] (France)
[illegible]
பேரப்பிள்ளைகள்.

தபால்கட்டைச் சந்தி,
ஆனைக்கோட்டை.


(CR 47016) A

---

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் சதாசிவம் தெட்சணாமூர்த்தி**

(ஓய்வுபெற்ற முதலியார்)



தோற்றம் 16.08.1947 மறைவு 30.01.2013

திதி: சங்கடஹரசதுர்த்தி (05.02.2026)

மண்ணுலகில் பிறந்து மண்ணுலக வாழ்வில்
மனம் மகிழ வாழ்ந்து இறைவன் நம்பிக்கையில்
ஈடுபட்டு கல்விச்சுடர் ஏற்றி குடும்பத்தின்
குலவிளக்காய் திகழ்ந்து
எல்லோரின் உயர்விற்காய்
பாடுபட்டுப் பார்போற்ற வையகத்தில் வாழ்ந்த
என்னுயிர்த் தெய்வமே!

விண்ணுலகம் சென்று இன்று பதின்மூன்று ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் பிரிவுத்துயர் என் நெஞ்சை விட்டகலவில்லை
நீங்கா நினைவுகளுடன் உங்கள் மனைவி
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.


கஜபதி செட்டி லேன்,
இணுவில் மேற்கு,
இணுவில்.

மனைவி - சிவயோகமணி

(CS/60626) J-1

---

## மரண அறிவித்தல்



தோற்றம் 18.11.1949 மறைவு 03.02.2026

**பொன்னுத்துரை தர்மலிங்கம்**

சீனிவாசன் வீதி, கொட்டடியை பிறப்பிடமாகவும், மயிலு வீதி, ஆறுகால்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை தர்மலிங்கம் அவர்கள் கடந்த (03.02.2026) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - செல்லக்கண்ணு தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - செல்லம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், ரதிதேவியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சாந்தலிங்கம், சுந்தரலிங்கம், சுந்தரலட்சுமி, பத்மலிங்கம் மற்றும் சிவலிங்கம், சதாசிவம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கணமுகன் (Holland), கபிலன் (France), கணமுகி (London), கார்த்தீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஓவியா, சியான் (Holland), தர்மீகன், சொப்பியா (France), செந்தியா (London) ஆகியோரின் பாசமிகு பேரனும், செந்தூரன் (London), காருணி (Holland), சைலையா (France) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.02.2026) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்
கார்த்தீபன் - மகன் - 076 807 8808

மயிலு வீதி,
ஆறுகால்மடம்.

(CS/60652) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## ஸ்ரீலங்காவின்...

ஸ்ரீலங்காவின் சுதந்திரதினத்தை கரிநாளாகக் கடைப்பிடித்து போராட்டங்களையும் பேரணிகளையும் முன்னெடுக்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் அண்மையில் அழைப்பு விடுத்திருந்தனர். இந்தப் போராட்டத்துக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், அரசியற் கட்சிகள், சிவில் சமூக அமைப்பினர் எனப் பல தரப்பினரும் தமது ஆதரவைத் தெரிவித்திருந்தனர். இதையடுத்தே, இலங்கையின் சுதந்திரதினமான நேற்று தமிழர் தாயகத்தின் பல்வேறு பகுதிகளில் போராட்டங்களும் பேரணிகளும் முன்னெடுக்கப்பட்டன.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை கிளிநொச்சி மாவட்டத்தில் பிரதான போராட்டம் இடம்பெற்றது. கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்னாக ஆரம்பித்த போராட்டம், அங்கிருந்து பசுமைப்பூங்கா வரை பேரணியாகச் சென்றது. தமிழர்கள் இந்த நாட்டில் அடிமைத்தனக்கு உட்படுவதையும், கொடுமைப்படுவதையும் வெளிப்படுத்தும் வகையில் காட்சிப் பொருள்களும் பேரணியில் காண்பிக்கப்பட்டன.

'தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை ஊடக நீதி வழங்கப்பட வேண்டும். குற்றவாளிகளே போர்க்குற்றத்தை விசாரிக்கும் பொறிமுறையை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், காணி விடுவிப்பு, அரசியற் கைதிகளின் விடுதலை, பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கம், பௌத்த மயமாக்கல் உள்ளிட்ட விடயங்களில் ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் விரைவாக நீதியை வழங்க வேண்டும்' என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வலியுறுத்தினார்கள். தமது கோரிக்கைகளை உள்ளடக்கிய பதாகைகளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர்.

இந்தப் போராட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், சிவஞானம் சிறீதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், பல்கலைக்கழக மாணவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பெருந்திரளானவர்கள் கலந்துகொண்டனர்.

கிழக்கு மாகாணத்தின் பிரதான பேரணி மட்டக்களப்பில் இடம்பெற்றது. அத்துடன், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் ஏற்பாட்டிலும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் போராட்டங்கள் பரவலாக முன்னெடுக்கப்பட்டன.

### புலம்பெயர் தேசங்களிலும் பரவலாகப் போராட்டங்கள்

இதைவிட, ஸ்ரீலங்காவின் சுதந்திர தினத்தை கரிநாளாக அறிவிக்கும் போராட்டம் புலம்பெயர் தேசங்களிலும் இடம்பெற்றது. பிரிட்டனின் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு முன்பாக இடம்பெற்ற போராட்டத்தில் ஏராளமான ஈழத் தமிழர்கள் கலந்துகொண்டனர். பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் இருந்து பிரிட்டன் பிரதமர் அலுவலகம் வரை அவர்கள் பேரணியையும் முன்னெடுத்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம)



இலங்கையின் சுதந்திரதினத்தை தமிழர்களின் கரிநாளாக அறிவித்து, முல்லைத்தீவில் நேற்று முழு அடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ம-19)







இலங்கையின் சுதந்திரம் தமிழர் தாயகத்தின் கரிநாள் என்று பிரகடனம் செய்து கிளிநொச்சியில் நேற்றுப் மிகப்பெரும் போராட்டமும் பேரணியும் இடம்பெற்றது. அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் இந்தப் பேரணியிலும் போராட்டத்திலும் கலந்துகொண்டனர். (ம)


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 30 . 07 . 1944

மறைவு 21 . 01 . 2022

அமரர்
ஜெகசோதிமலர் சடாட்சரம்

திதி: சங்கடஹர சதுர்த்தி

ஆண்டுகள் நான்கு கடந்ததம்மா!
நாளெல்லாம் நலமாய் வாழ
காலமெல்லாம் கரம் தந்த
வாழ்வின் அன்னையே!
உங்கள் அன்பு நிறைந்த மனமும்
ஆதரவான வார்த்தைகளும்
வழிகாட்டும் ஒளியாய்
எம்மோடு என்றும் வாழும் அன்னையே!
உங்கள் ஆன்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மாசிவன், நீர்வேலி. குடும்பத்தினர்.

CS 60633 ) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சாவகச்சேரி மருத்துவமனையில்

# ௬௦௦ நோயாளர்களுக்கு ஒரேயொரு மருத்துவர்!

சாவகச்சேரி,பெப்.5

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நடைபெறும் கிளினிக்பிரிவுகளுக்கு, ஒரேயொரு மருத்துவர் மட்டும் கடமையாற்றுவதால், கிளினிக்குகளுக்கு வருகை தரும் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர். மருத்துவமனையில் பிரதி செவ்வாய்க்கிழமைகளில் பொது மருத்துவக் கிளினிக்கும், பிரதி வியாழக் கிழமைகளில் நீரிழிவுக் கிளினிக்கும் நடைபெறுகின்றது. இந்த கிளினிக்குகளுக்குக் குறைந்தது 600 நோயாளர்கள் சிகிச்சை பெறவருகின்றனர்.

இந்த நிலையில் ஒரேயொரு மருத்துவர் காலை 8 மணி தொடக்கம் பகல் 11 மணி வரை கடமையில் உள்ளார். இதனால் அடுத்த மருத்துவர் வரும் வரை நோயாளர்கள் காத்திருக்கவேண்டியுள்ளது.

இது தொடர்பாக மருத்துவமனைப் பொறுப்பதிகாரியுடன் (மருத்துவ அத்தியட்சகருடன்) தொடர்பு கொண்டு கேட்டபோது, சாவகச்சேரி மருத்துவமனை ஆதார மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்ட பின்னர், மருத்துவர் பற்றாக்குறை காணப்படுகின்றது. அத்துடன் நோயாளர்கள் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இதனால் கிளினிக்கில் கடமையாற்றும் மருத்துவர் அவசர நோயாளர்களையும் பரிசோதிக்கவேண்டியுள்ளது. என்றார். முன்னைய காலங்களில் கிளினிக்குகளில் மருத்துவ நிபுணர் உட்பட ஐவர் கடமையாற்றியதுடன், யாழ்.போதனா மருத்துவமனையில் நடைபெற்ற பல்வேறு கிளினிக்களும் சாவகச்சேரி மருத்துவமனை மருத்துவர்களால் நடாத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (க-9)

## மகளிர்தின போட்டிகள் விண்ணப்பம் கோரல்

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சினால் இவ்வருட பன்னாட்டு மகளிர்தினத்தை முன்னிட்டு பெண் சாதனையாளர் தெரிவு மற்றும் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பெண்களை வலுவூட்டும், சமத்துவம், தலைமைத்துவம், உரிமைகள், சவால்கள், சமூகமாற்றம் என்ற கருப்பொருளுக்கமைய இம்முறை இந்தத் தினம் கொண்டாடப்படவுள்ளது.

மகளிர் தினத்தை முன்னிட்டு கட்டுரை, கவிதை போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இதற்கான விண்ணப்பப்படிவங்களை அந்தந்தப் பிரதேச செயலகத்தில் பெற்று விண்ணப்பிக்கு மாறு மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ் வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும், தொழிற்றுறையும், தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தகமும் வாணிபமும் அமைச்சின் செயலாளர் மு. நந்தகோபாலன் அறிவித்துள்ளார். (ச-41-9)


## வேலை வாய்ப்பு

K.K.S. வீதி, மனோகரா சந்தியில் அமைந்துள்ள **முதல்வன் இயற்கை பூக்கள்** எனும் கடைக்கு பணியாளர்கள் தேவை (பெண் பிள்ளைகளுக்கு முன்னுரிமை). சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். முன் அனுபவம் தேவையில்லை.

**(வெளி மாவட்டத்தில் வசிப்பவர்களுக்கு தங்குமிடம், உணவு இலவசம்)**

**தொடர்பு: 077 9863 089 / 075 4757 056**

## மரண அறிவித்தல்



### விநாசித்தம்பி வேலாயுதப்பிள்ளை

மட்டுவில் வடக்கு மட்டுவிலை பிறப்பிடமாகவும் கல்வயல், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி வேலாயுதபிள்ளை நேற்று (04.02.2026) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பி மாணிக்கம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற செல்லத்துரை பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், கமலாவதியின் அன்புக் கணவரும், செந்தில் (முன்னாள் விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்), தயாழினி, தர்மினி (ஆசிரியர், கிளாலி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், விமலன் (மல்லாவி), ஜபேஷன் (அஞ்சல் அலுவலகம் - பளை) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், கனகம்மா, மங்கையற்கரசி, கமலாம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரரும், நடனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான நடேசபிள்ளை, திருவிளங்கம் மற்றும் சிவமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும், கனிஸ்ரன், மதுராங்கன், ஆரபி, சஸ்மிதா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2026) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குகன் மில் வீதி,
கல்வயல், சாவகச்சேரி.
077 5941 142

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 47018) A

NALIN Information Technologies Pvt Ltd.

SMART PANEL OFFER

MEGA OFFER

TOP BRANDS

Horion
HIKVISION
Riotouch
unv GOC

February 01-14 ம் திகதிகள் வரை




பாடசாலைகள் , கல்வி நிறுவனங்களுக்கான மாபெரும் விலைக்கழிவுகள்

எமது நிறுவனத்தால் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு 200 க்கு மேற்பட்ட Smart Panels & Smart Boards வழங்கி வைக்கப்பட்டுள்ளது

65",75",85",95" Size Available

FREE

STARTING PRICE - RS: 280000/=

2 - 3 Years Warranty

Office 2024 Professional Plus

முற்பதிவு செய்யும் முதல் 15 வாடிக்கையாளர்களுக்கு MS OFFICE GENUINE VERSION இலவசமாக வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு
Thushyanthan - 076 359 4366
Smart Panel களை எமது காட்சியறையில் நேரில் வருகை தந்து பார்வையிடலாம்

Free Installation - Free Delivery ( Jaffna District )

Terms & Conditions Apply

NALIN IT Mon-Sat Jaffna - 077 766 7975 | Exclusive - 076 359 4359
Mannar - 076 359 4368 | Kilinochchi - 076 359 7610

No : 195/2, Parameswara Junction Palaly Road Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்...

பயணிக்க வேண்டும் இவ்வாறு வல் வெட்டித்துறை நகர பிதாவும், நாடாளு மன்ற முன்னாள் உறுப்பினருமான எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

தமிழ்த்தேசியப் பேரவை ஏற்பாடு செய்தி ருந்த 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்?' எனும் பகிரங்க அரசியற் கருத்த ரங்கு நேற்றுப் புதன்கிழமை மாலை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு அருகில் உள்ள வை.எம்.சீ.ஏ. மண்டபத் தில் நடைபெற்றது.

இதில் சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித் ததாவது:-

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்து 78 வருடங்களாகியும் தமிழ்மக்களின் நியாய மான கோரிக்கைகள் எதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. தொடர்ந்தும் சமஷ்டித் தீர்வைக் கேட்டு மண்டியிட்ட நாங்கள், 1976ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதி வட்டுக்கோட்டையில் தமி ழீழப் பிரகடனத்தை மேற்கொண்டதைத் தொடர்ந்து, 1977ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் பொது வாக்கெடுப்பு வரை சென்றோம்.

தமிழர்களுக்கு என்ன தீர்வு வேண்டும்? என்பதை அரசியல் கட்சிகளோ, அரசி யல் கட்சிகளின் தலைவர்களோ தீர்மா னிக்க முடியாது. மக்கள்தான் தீர்மா னிக்க வேண்டும். அதுதான் சுயநிர்ணய உரிமை. ஐக்கிய நாடுகள் சாசனத்தின் அடிப்படையிலான சுயநிர்ணய உரி மையை நாங்கள் எவ்வாறு பாவிப்பது? இதுதொடர்பாகத் தமிழ்த்தேசியக் கட்சிக ளிடையே ஒரு தெளிவு பிறக்கவேண்டும். தமிழ்த் தலைவர்கள் முன்னைய அர சாங்கங்களுடன் செய்து கொண்ட ஒப் பந்தங்கள் யாவும் வீணாகி அடக்குமு றைகள் மூலம் தமிழினம் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வருகின்றது. புதிய ஆட்சி யாளர்கள் மீது தமிழ்மக்கள் நம்பிக்கை வைத்து அவர்களுக்கு வாக்குகளை அளித்திருந்த போதிலும் அவர்களது நடவடிக்கைகளும் தொடர்ச்சியான ஆக் கிரமிப்பை நோக்கிச் சென்று கொண்டி ருக்கின்றன. இந்த நிலையில் நாங்கள் தமிழர் தேசத்தைத் திரள்நிலையில் வைத்திருந்து சர்வதேச ரீதியாகப் பெறக் கூடிய தீர்வுகளைப் பெறுவதற்காகத் தொடர்ந்தும் உழைக்க வேண்டும் - என் றார். (அ-ம-66)

## அநுரவின்...

களும், முன்னாள் அமைச்சர்களும் தெரிவித்து வருகின்றனர். சுதந்திரக் கட் சியின் முக்கியஸ்தர்களும் இத்தகைய கருத்தையே முன்வைத்துள்ளனர். இவ் வாறான நிலையிலேயே, ஜனாதிபதி அநுரவின் அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது என மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தில் 159 ஆசனங்களை தேசிய மக்கள் சக்தி கொண்டிருக்கின் றது. 159 ஆசனங்களை வைத்திருக்கும் அரசாங்கத்தை வீழ்த்துவதென்பது அவ் வளவு இலகுவான காரியம் அல்ல. எதிர்க் கட்சிகள் தமது விருப்பத்துக்கு ஏற்ப கருத்துத் தெரிவித்தால் போதாது. யதார்த்தத்தையும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

நாட்டுக்குப் பொருத்தமான கல்விக் கொள்கை நிச்சயம் உருவாக்கப்பட வேண்டும். கல்வியில் அரசியலை திணிக்கக்கூடாது. கல்விமறுசீரமைப்பை அரசியலாக்கும் வகையில் எதிர்க்கட்சி கள் செயற்படக்கூடாது - என்றார். (அ-ம-44)

## யாழ்ப்பாணப்...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினரால் இன்று பணிப்புறக்க ணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட வுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணப் பல்க லைக்கழக ஊழியர் சங்கத்தால் நேற்று விடுக்கப்பட்ட ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

2025ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதி துணைவேந்தருடனும், நிர்வாக அதிகாரிகளுடனும் எமது பிரச்சி னைகள் தொடர்பில் சுட்டிக்காட்டியிருந் தோம். இதன்போது, எமது கோரிக்கை கள் தொடர்பில் சாதகமான பதில்கள் வழங்கப்பட்டன. அவற்றை ஜனவரி மாதத்துக்குள் நிறைவேற்றுவதாகவும் வாக்குறுதி வழங்கப்பட்டது. ஆயினும் இதுவரை திருப்திகரமான நடவடிக்கை கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. எமது தொடர்ச்சியான அழுத்தங்களின் பின் மேற்கொள்ளப்பட்ட ஓரிரு நடவடிக் கைகள் கூட பொருத்தமற்ற வகையில் உரிய நடைமுறைகளைப் பின்பற்றாம லேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகத்தின் நலன் சார்ந்தும், துணைவேந்தர் மீதுள்ள நம்பிக்கை கார ணமாகவும் நாங்கள் இதுவரை போதிய அவகாசங்கள் வழங்கியுள்ள போதிலும், எமது நல்லெண்ணத்தை நிர்வாகம் பல வீனமாகக் கருதுவதால் கடுமையான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய கட் டாய நிலைமை எமக்கு ஏற்பட்டுள்ளது. ஆதலால், பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி வியாழக்கிழமை எமது கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முன்றலில் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம் - என்றுள்ளது. (அ-ம-26)

## இலங்கையின்...

துள்ளார். சுதந்திரதினத்தை முன்னிட்டு, பொரளையில் உள்ள அனைத்துப் புனி தர்கள் தேவாலயத்தில் இடம்பெற்ற விசேட ஆராதனையில் கர்தினால் மல் கம் ரஞ்சித் ஆண்டகை கலந்துகொண் டார். அங்கு உரையாற்றும்போதே இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கை சுதந்திரம் அடைந்து 78 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இந்த நீண்ட காலத்தில் ஆன்மீக, சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை அடைய நாம் எவ்வளவு முயற்சி செய்தா லும், எமது இலக்குகளை அடைய முடி யாமல் இருப்பது கவலைக்குரியது. வெளிநாட்டுத் தலைமைகளிடம் இருந்து நாம் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டா லும், வெளிநாட்டவர்களின் மரபுகள், சட்டங்கள், பொருளாதாரப் பாதைகள் என்பனவே இன்றும் தொடர்கின்றன. சுதந்திரத்தின் பின்னர் அறிமுகப்படுத்தப் பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கை எமது உள்நாட்டு உற்பத்தி முறையை முழுமையாகச் சீர்குலைத்துவிட்டது. அன்று அநேகமானவற்றில் தன்னி றைவு பெற்றிருந்த நாம், இன்று சிறிய ஊசி முதல் கப்பல்கள் வரை அனைத் தையும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டுள் ளோம். அன்று 20 ரூபா வரையில் இருந்த அமெரிக்க டொலரின் மதிப்பு இன்று பலமடங்கு உயர்ந்து எமக்கு அச் சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

ஒரு நாட்டின் உண்மையான பொருளா தார முன்னேற்றம் என்பது அந்த நாட் டுக்கே உரித்தான தார்மீகக் கொள்கை ளின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட் டால் மட்டுமே சாத்தியமாகும். கடந்த காலங்களில் ஐரோப்பிய நாடுகள் மத மற்ற நாகரிகத்தை உருவாக்க முயன் றன. குறிப்பாக இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு மதத்தை ஒதுக்கிவிட் டுச் சுயநலமான ஒரு சமூகத்தை உரு வாக்கினார்கள். இதன் விளைவாக இன்று அந்த நாடுகள் பெரும் இன்னல் களைச் சந்தித்து வருகின்றன. மதமோ, சரியான கொள்கைகளோ இல்லாத சமூகம் நீண்ட காலம் நிலைக்காது என் பதற்கு இன்றைய ஐரோப்பாவே சான்று. அத்தகைய சூழலை இலங்கையில் உரு வாக்க முயல்வது முட்டாள்தனமான செயலாகும் - என்றார். (அ-ம)

## யாழ்...

கத்தில் கறுப்புக் கொடிகள் பறக்க விடப் பட்டன.

'இலங்கையின் சுதந்திரதினம் தமிழர்க ளின் கரிநாள்' என்பதை வெளிப்படுத் தும் வகையிலேயே, யாழ்ப்பாணப் பல்க லைக் கழகத்தில் இந்தக் கறுப்புக்கொடி கள் பறக்கவிடப்பட்டன. (அ-ம-66-26)

## பதிவு...

றும் வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் தெரிவித் துள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

இலங்கையின் 1958ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க சட்ட ஏற்பாடுகளின்படி கால்நடைகளைப் பதிவுசெய்வது கட்டா யமாக்கப்பட்டுள்ளது. எனவே, கால்ந டைப் பண்ணையாளர்கள் கால்நடைப் பண்ணைகளை பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்களை தங்களது பிரதேச கால்நடை அலுவலகங்களில் பெற்று அவற்றைப் பூரணப்படுத்தி எதிர் வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் வழங்கு வது அவசியம்.

18 மாதங்களுக்கு மேற்பட்ட கால்நடை களை பதிவு செய்யாது வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும் என் பதை பண்ணையாளர்கள் புரிந்து கொள்ளல் வேண்டும். எதிர்காலங்களில் பதிவு செய்யப்படாத கால்நடைகள் அரச உடமையாக்கப்படலாம். அத்துடன், கால்நடைகளைப் பதிவுசெய்யாத பட்சத் தில் தடுப்பூசி ஏற்றுதல், கால்நடைகளை கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத் திரம் வழங்குதல், கால்நடைகளைக் காப்புறுதி செய்தல், மற்றும் கால்நடைக ளுக்கான இழப்பீடுகளை வழங்குதல் உள்ளிட்ட பணிகள் பாதிக்கப்படும். அத் துடன் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட பண்ணைகளை ஒவ்வொரு வருடமும் புதுப்பித்துக்கொள்ள வேண்டும் - என் றுள்ளது. (அ-ம-21)

## சுதந்திரத்துக்கான...

இலங்கையின் 78ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஆற்றிய உரை யில், ஜனாதிபதி அநுர மேலும் தெரிவித் ததாவது:-

இந்த வருட சுதந்திரதினத்துக்கான கருப்பொருள் 'இலங்கையைக் கட்டி யெழுப்புவோம்' என்பதாகும். நாட்டின் சுயாதீனத்தன்மை, இறைமை மற்றும் சுதந்திரம் ஆகிய விடயங்களில் எமது சுதந்திரத்தையும் உரிமையையும் நாங் கள் நிலைநிறுத்தவேண்டும்.

சுதந்திரத்தின் பின்னரான 78 வருடங்க ளில் வெற்றி, தோல்வி இரண்டும் உள் ளது. நல்லதும் இருக்கிறது. கெட்டதும் இருக்கிறது. நாம் ஒருபோதும் தீய வற்றை ஒதுக்க தயங்க மாட்டோம். அதே போன்று ஒருபோதும் நல்லவற்றை உள்வாங்குவதற்கு அஞ்சப் போவ தில்லை. அதனால் கடந்தகால செழிப் பான விடயங்களின் அடிப்படையில் இந்த நாட்டை மீளக்கட்டியெழுப்பும் பொறுப்பு எனக்கும் உங்களுக்கும் இருப் பதாக நம்புகிறேன்.

இலங்கை புவியியல் ரீதியில் மிகச்சிறந்த இடத்தில் உள்ளது. இயற்கை வளங்க ளால் நாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டுள் ளோம். ஆனால், இவை அனைத்தை யும்விட எமது மனிதவளமே அதி உயர் வான வளம். எமது மனித வளத்தை வைத்து உலகில் வேறெந்த நாட்டுடனும் போட்டிபோடும் வல்லமை எமக்கு உள் ளது. அறியாமைக்குப் பதிலாக அறிவை யும், பழைய பாதகங்களுக்கு பதிலாக முன்னேற்றத்தையும், பிரிவினைக்குப் பதிலாக ஒற்றுமையையும் அடிப்படை யாகக் கொண்ட நவீன மனித வளத்தை நாம் உருவாக்கவேண்டும்.

இலங்கையென்பது பல்வேறு மதத்தவர் கள் வாழும் நாடு. தனித்துவமான கலா சாரங்களை கொண்ட மக்கள் உள்ள னர். அதே போன்று பிரதானமாக இரு மொழிகளை தமது தாய்மொழியாகக் கொண்ட மக்கள் வாழ்கின்றனர். நம்பிக் கைகள், கலாசாரங்கள், வழிபாடுகளில் வேறுபாடு உள்ளன. இந்த வேறுபாடு களை நாங்கள் மற்றவர்களுக்கு எதி ரான ஆயுதங்களாக உயர்த்திப் பிடித் தால் நிச்சயம் நாம் பலவீனப்படுவோம். இந்த வேறுபாடுகளை மதித்து ஒவ் வொரு இனக்குழுக்களின் தனித்து வத்தை அங்கீகரித்து அதேவேளை இலங்கையராக சிந்திக்கக் கூடிய புதிய மாற்றத்துக்கான யுகம் எமக்கு அவசி யம். இனவாதம், மதவாதம் என்ற இரு அசிங்கமான வசனங்கள் எமது அகரா தியில் உள்ளன. இனவாதம் மற்றும் மதவாதத்தால் எமது பலத்தை நாம் அழித்து வருகின்றோம். அத்தகைய நிலைமைகளுக்கு இனி இடமில்லை - என்றார். (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடைமுறைக்கு வந்தது பல்கலை திருத்தச்சட்டம்

கொழும்பு, பெப்.5

பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டவரைவில் சபாநயாகர் ஜகத் விக்கிரமரத்ன நேற்றுமுன்தினம் கையெழுத்திட்டு சான்றுரைப்படுத்தினார்.

இந்தச் சட்டவரைவு கடந்த ஜனவரி 23 ஆம் திகதி திருத்தங்களுடன் வாக்கெடுப்பு இன்றி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டமூலம் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தைத் திருத்து வதற்கான சட்டவரைவாகும். சபாநாயகர் சான்றுரைப்படுத்தியதை அடுத்து, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டவரைவு, 2026 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமாக நடைமுறைக்கு வந்துள்ளது. (எ-இ)

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், பெப்.5

அரியாலை வெட்டுக்குளம் அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தில் 1008 சங்காபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது. காலை 6 மணிக்கு பூசை வழிபாடுகள் ஆரம்பமாகி காலை 9.30 மணிக்கு அபிஷேக பூசை வழிபாடுகள் இடம் பெற்று முற்பகல் 11 மணியளவில் சங்காபிஷேகம் இடம்பெறும். (ச)

## யாழ்ப்பாணத்தில் 'டே சேர்ஜரி சென்டர்' முன்னோடித்திட்ட ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.5

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடம் ஆகியவற்றின் இணைந்த ஏற்பாட்டில் 'யாழ்ப்பாண டே சேர்ஜரி சென்டர்' (Jaffna Day Surgery Centre - JDSC) நிலையத்தின் முன்னோடித்திட்ட ஆரம்ப விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக மருத்துவபீடத்தின் மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சித்தொகுதியில் இடம்பெறவுள்ளது.

இந்தத் திட்டம் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படும் நோயாளிகள் அதே நாளில் வீடு திரும்புவதற்கு ஏதுவான நவீன வசதிகளுடன்கூடிய ஒரு முன்னோடி முயற்சியாக ஆரம்பிக்கப்படவுள்ளது. நிகழ்வில் யாழ். போதனா மருத்துவமனை மற்றும் மருத்துவபீடத்தின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர். (ச)

### பருத்தித்துறை

## இ.போ.ச. சாலைக்கு புதிய முகாமையாளர்

யாழ்ப்பாணம், பெப்.5

இலங்கை போக்குவரத்துச் சபையின் வடமராட்சி பருத்தித்துறை சாலையின் புதிய முகாமையா ளராக பொ.நந்தகுமார் நியமிக்கப்பட்டுள்ளார். மனிதவள முகாமையாளரால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ள நிலையில் தலைமைக்காரியாலயத்தில் அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். (ச-17)

மனரீதியாக பாதிக்கப்பட்டோருக்கான தீர்வு!
**துளிர்**
உணவு, பாதுகாப்பான இல்லப் பராமரிப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு: 074 340 8494
(CS 31146) A

**திருவாசகம் முதியோர் இல்லம்**
நல்லூரில் அமைந்துள்ள முதியோர் இல்லத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
- ஓய்வுபெற்ற தாதி/ பகுதிநேர தாதி
- சமையலாளர் (பெண்)
- சமையல் உதவியாளர் (பெண்)
- முதியோர் பராமரிப்பாளர்
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:-
077 528 5213, 076 207 4416

2025 (2026) O/L
மாணவர்களுக்கான இறுதிக் கருத்தரங்கு
வரலாறு
ஆசிரியர் RS. சந்திரன்
காலம் பெப்ரவரி 07,08 சனி, ஞாயிற்றுக்கிழமை (காலை 8.00 மணி முதல் 1.00 வரை)
குறிப்புகள் :
- ஆர்வமுள்ள வெளிமாணவர்கள் கலந்து கொள்ள முடியும்.
- எதிர்பார்க்கை வினாக்களும் பாடக்குறிப்புகளும் வழங்கப்படும்
- இலங்கைப்படம், உலகப்படம் இலகுவான முறையின் அடிப்படையில் குறித்துக் காட்டப்படும்
- கட்டணத்தைச் செலுத்தி கருத்தரங்கில் பங்குபற்ற முடியும்.
றோயல் அக்கடமி
அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0776649134
நிர்வாகம்

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மறக்க முடியாத நாள்
கடந்த (05.02.2023) அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புச் செல்வன்

**ஜோசேப் அனோஜன் (அனோச்)**

(கொக்குவில் இந்துக்கல்லூரி பழையமாணவன், DHL Whare House Supervisor)

தோற்றம் 23.07.2003 — மறைவு 05.02.2023

இன்றுடன் மூன்று ஆண்டுகள் கடந்து விட்டன
நினைத்து கூட பார்க்கலடா அனோச்குட்டி எத்தனை
உறவுகள் அருகினில் இருந்தாலும்
எங்கள் உள்ளம்தேடும் உறவு நீதானடா
உன்னிடம் உணர்ந்த அன்பை நாம்
வேறு யாரிடமும் உணர்ந்தது இல்லையடா
உன்னை நினைக்காத நாட்களும் இல்லை
உன்னை நினைத்து கண்ணீர் சிந்தாத
நாட்களும் இல்லையே எங்கள் உயிரே
உன்னை இழந்து விட்டோம் என்பதை விட
உன்னை தவறவிட்டோம் என்பதே எம்மனதை
வாட்டி வதைக்கிறது ஏன் எங்களுக்கு இந்த நிலமை
கடவுளுக்கு கூட இரக்கம் வரவில்லையே
எங்களின் உயிரான உன் உயிரை
இரக்கம் இல்லாமல் பறித்ததற்கு உன் நினைவுகளை
சுமந்தபடியே உயிர் வாழ்கிறோமடா...

உன் இழப்பால் உள்ளம் உடைந்த
பாசமிகு அம்மா
யோ. ஜெனகல்யா

582/56 சென் சொல்சியம் லேன்,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.

(CS/60640) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 02 . 1938 — மறைவு 01 . 02 . 2026



**பஞ்சலிங்கம் சர்வேஸ்வரி (பஞ்சு மாமி)**

மாவிட்டபுரம் வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் கரந்தன், நீர்வேலியை வதிவிடமாகவும் கொண்ட பஞ்சலிங்கம் சர்வேஸ்வரி 01.02.2026 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பஞ்சலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, சண்முகநாதன், இராஜேஸ்வரி, தில்லைநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சுந்தரலிங்கம், சோதிமலர், இராசம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், கலைச்செல்வி (இலங்கை), குருபரன் (கனடா), சிறிபரன் (லண்டன்), கலைவாணி (லண்டன்), சிவபரன் (லண்டன்), கலைவதனா (டென்மார்க்), கலைந்தினி (உள்ளூராட்சி அமைச்சு வட மாகாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தயாநிதி (ஓய்வுநிலைக் கணக்காளர் - அச்சுவேலி ப.நோ.கூ.சங்கம்), நிர்மலா (கனடா), அன்பரசி (லண்டன்), மகேந்திரராஜா (லண்டன்), சாந்தலட்சுமி (லண்டன்), மோகன்ராஜ் (டென்மார்க்), ஜெசிந்தன் (ஆசிரியர் - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற தனஞ்சயன் மற்றும் தயந்தினி - இளங்கோ, தணிகா (Magick Tech - Jaffna), நிருஷன், ஜஸ்மின், ஆர்லன், அனோஜன், சிவதர்ஷன் - பிருந்தா, டினேஸ் பகீர்த்தனா, மதுஷன், மானசா, அபிராம், அபினா, அஜன், அபிஷன், அபினாஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அக்ஷனா, ஹரன், ஹரிஸ் ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2026) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரந்தன், நீர்வேலி.
0775011957
0777408735

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 31139) A



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org